# ஜனவிநோதினி.

இல. 2.] பெப்ருவரிமீ 1876. [புஸ்த. VII.

## பம்பாய் நகரம்.

நமது தேசத்தில் சீரோங்கி விளங்காநின்ற பற்பல பட்டணங்கள் இருப்பினும் அவைகளுள் பம்பாய் நகரத்தை, இந்நாட்டில் விஜயஞ்செய்திருக்கிற நமது இளவரசராகிய பிரின்ஸ் அவ் வேல்ஸ் மகாப்பிரபு முதல்முதல் இத்தேசத்தில் கப்பலைவிட்டிறங்குவதற்கும், இன்னும் சில தினத்தில் சுதேசம்போகக் கப்பலேறுவதற்கும் தகுதியானவிடமாய்க்கொண்டது அந்நகரம்பெற்ற பாக்கியமன்றோ.

அப்பட்டணத்தை முதல்முதல் கடலிலிருந்து பார்ப்பவர்கள் அதனிலேமையைப்பார்த்து வெகு ஆச்சரியப்படுவார்கள். அந்நகரம் ஒரு சிறிய தீவின்மேல் பூமிக்கு ஒரு அலங்கார மணிபோலிருக்கின்றது. அந்தத் தீவின் வடகிழ்முனையில் அப்பட்டணத்துக் கோட்டை கட்டியிருக்கின்றது. அதன் கிழண்டை கப்பல்கள் வந்து தங்குவதற்கு மிகவும் சிறந்த அடைக்கலஸ்தானமொன்றுண்டு. பம்பாய் நகரமானது மேலிந்தியாவுக்கு ஓர் திலகம்போல் விளங்குகிறது. நானாதேசங்களிலும் சுற்றி அங்கங்குள்ள விநோதங்களையெல்லாம் பார்த்தவனாயினும் ஒருவன் கடைசியில் இந்நகரத்தை வந்து பார்ப்பானாயின் உடனே அவன் மனதில் ஒரு வியப்பு தோன்றாமல்போகாது. சிறந்த மாளிகைகளுள்ளதென்று பேர்பெற்ற ஹூக்ளி நதிக்கரையிலிருக்கும் கல்கத்தா நகரமானது, இப்போது நமது தேசத்திற்குப் பிரதான நகரமாயிருந்தபோதிலும், இன்னும் சிலகாலையில் இது மாறி, மேற்றிசையிலிருந்து வருபவர்களுக்குச் சமீபமானவிடமாயிருப்பதாலும் பிரஜாவிருத்தியிலும் வர்த்தகத்திலும் கொஞ்சம் ஏறக்குறைய லண்டன் நகரத்திற்குச் சமமாயிருப்பதாலும் இந்தப் பம்பாய்பட்டணமே நமது இந்துதேசத்திற்குப்

பிரதான பட்டணமாய்விடுமென்று சிலர் எண்ணத்தக்கதாயிருக்கிறது.

பம்பாய்நகரம் எட்டுமைல் நீளமும், சராசரி மூன்றுமைல் அகலமும், இருபதுமைல் சுற்றளவும் உடையது. அந்நகரத்தினுள்ள கப்பல்துறை பனிரண்டு அல்லது பதினுன்குமைல் நீளமும், நான்குமைல் முதல் ஆறுமைல்வரையில் அகலமுமுள்ளது. ஆதியில் அவ்விடத்தில் இரண்டு பெரிய பாறைகளிருந்தன. அவை நாளளவில் நடுவில் மண்மேடிட்டு ஒன்றுய்க்கூடி அப்புறம் கொஞ்சங்கொஞ்சமாய் அதன்மேல் மண்மூட ஒரு தீவு ஆயிற்று. சில்காலத்திற்குப்பின்பு ஜனங்கள் அங்கே குடிபுகுந்தனர். அக்காலத்தில் அது மிகவும் அசவுக்கியமானவிடமாயிருந்ததாம். இப்போதோ ஜனங்கள் வஸிக்க மிகவும் அனுகூலமான பிரதேசமாய் விளங்குகின்றது.

அந்நகரத்தில் பற்பலவிதமான வர்த்தகசாலைகளும், ஆயுதசாலைகளும், வைத்தியசாலைகளும், சிறந்த கோட்டையும் இன்னும் பல மேலான கட்டடங்களுமிருக்கின்றன. அவ்விடத்திய துறையில் அமைத்திருக்கும் மரக்கலவடைக்கலம் நூதனமாய்க் கப்பல்கள் செய்வதற்கும் உடைந்துபோனவைகளைச் செப்பனிடுவதற்கும் உசிதமான இடம். தொண்ணூறு பீரங்கிகள் ஏற்றிக்கொண்டு போகத்தக்க மினீ என்கிற கப்பலும் இன்னும் அநேகம் மரமரக்கைகளும் அவ்விடத்திலேதான் செய்யப்பட்டன. பம்பாயில் நகரமண்டபமென்று விலாசமான கட்டடமொன்றுண்டு. அது வெகு அழகான கட்டடம். அதில் பற்பல உத்தியோகசாலைகள் அமைத்திருக்கின்றன. அதன் முன்மண்டபம் வெகு விநோதமானது. அதில் வைத்திருக்கும் ஸரஸ்வதிபீடம் அல்லது புஸ்தகசாலையும், மியூசியம் அல்லது பலபொருள் காட்சிசாலையும் யாவரும் வியக்கத்தக்ககாட்சி. இதுவன்றியில் அநேகம் உயர்ந்த சலவைக்கல் பிரதிமைகளும் நாட்டப்பட்டிருக்கின்றன. அந்த விநோத நகரசபாமண்டபத்தின் உருவத்தைப் பக்கத்துப்படத்தில் காணலாம்.

இந்நகரத்தினது குடிகளின் நடையுடைபாவனைகள் முதலான சிறப்பைப்பற்றி மற்றொரு சஞ்சிகையில் சொல்லுவோம்.

திரிந்துகொண்டிருந்தால், ஒவ்வொருவனும் போட்டிபோட்டுக்கொண்டு வருவானாகையால் கூலி குறைந்துபோகும்; அப்படியன்றி இரண்டு வேலைக்காரரிருந்து ஆறுபேருக்கு அவர்கள் வேண்டியிருந்தால், கூலி உயரும்.

உணவுக்குவேண்டிய பதார்த்தங்கள் நயமாய் விற்குமாயின் வேலைக்காரர் சகாயமான கூலிக்குக் கிடைப்பார்களென்றும், பிரியமாயிருந்தால் வேலைக்காரர் இலகுவாய்க் கிடைக்கமாட்டார்களென்றும் சிலர் நினைக்கிறார்கள். பதார்த்த பஞ்சத்தினால் வேலைக்காரர் அகப்படுவது கொஞ்சம் பிரயாசையாயிருக்கக்கூடுமென்றாலும், பதார்த்தங்களின் விலைகளுக்கும் வேலையின் கூலிக்கும் நேரான சம்பந்தம் கொஞ்சமுமில்லையென்பதை நன்றாய் ரூபிக்கலாம். பதார்த்த நயநஷ்டத்தினால் வேலையின்கூலி நிர்ணயமாகிறதில்லையென்பது நிச்சயம்; வேலையென்னும் பொருளின் இருப்பு இவ்வளவு, செலவு இவ்வளவு என்பதின்பேரில் கூலி தீர்மானமாகிறதேதவிர மற்றப்படியல்ல. பதார்த்தங்கள் பிரியமாயிருக்குங்காலத்தில் வேலைகொள்பவர்களாகிய முதலாளிகள் தங்களுடைய வேலைக்காரர் சம்பளத்தை உயர்த்தவேணுமென்று சிலர் அபிப்பிராயப்படலாம். கஷ்டகாலத்தில் வேலைக்காரருடைய சம்பளத்தை நெருக்கிப்பிடியாமல் வயிற்றுக்குப் போதும்படியாகக் கொடுக்கவேண்டுமென்பது நியாயமே. இந்தமட்டில் நில்லாமல் ஒரு முதலாளி சொற்ப சம்பளத்துக்கு வர இஷ்டமுள்ள வேலைக்காரனை வேண்டாமென்று சொல்லிவிட்டு, அதிக சம்பளம் கொடுத்தே வேலைக்காரர் வைத்துக்கொள்வானேயானால் அவனைப் போன்ற மற்ற முதலாளிகள் அவன் தள்ளிவிடும் வேலைக்காரரை அமர்த்திக்கொண்டு அதிகலாபம் சம்பாதித்துப்போவார்கள்; அவனுக்கு நஷ்டம் வந்துவிடும். அவன் தள்ளிவிடும் வேலைக்காரரை ஒருவரும் வைத்துக்கொள்ளாவிடின் அவர்கள் பிழைப்பில்லாமல் பட்டினியாயிருக்கவேண்டுமல்லவா? வேலைக்காரர்களுக்குத் தங்களில் சிலருக்குமாத்திரந்தான் வேலை அகப்படவேண்டுமென்கிற பொறாமையுமில்லை; தங்கள் முதலாளிகள் நஷ்டமடையட்டுமென்ற கெட்ட எண்ணமுமில்லை. ஆகையால் அந்தந்த காலத்துக்குத்தக்கபடி கிடைக்கிற சம்பளத்தைக்கொண்டு வேலைக்காரர் திருப்தியடையவேண்டும். கூலி ஏறுகிறதும் இறங்குகிறதும் தெய்வகதியினாலென்பதுமில்லை; ஒருவருடைய இஷ்டத்தினாலென்பதுமில்லை. சாமான்களை விற்கிறவர்களுக்கும் வாங்குகிறவர்களுக்கும் என்ன சம்பந்தமோ அதே சம்பந்தந்தான் வேலைசெய்கிறவர்களுக்கும் கொள்பவர்களுக்கும் உள்ளது.

எல்லாவிதமான வேலைகளும் ஒரே அளவான பிரதிபலனை அடைகிறதில்லையென்கிறவிஷயம் எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

கூலி தாரதம்மியங்கள் ஏற்பட்டிருப்பதற்குப் பல காரணங்களுண்டு. நியாயமாய்ப்பார்த்தால் வேலையின் சுலபத்துக்கும் கஷ்டத்துக்கும் சுத்தத்துக்கும் அசுத்தத்துக்கும் கவருவத்துக்கும் அகருவத்துக்கும் ஏற்றபடி கூலி ஏற்படவேண்டும். தட்டாரவேலையைவிட நெசவுவேலை அதிக சுத்தமாயும் குறைந்த தேகபலத்தோடு செய்யக்கூடியதாயுமிருத்தலினாலே அதைவிட இதற்குக் கூலி குறைச்சலாயிருக்கவேண்டும். தட்டாரவேலை கொஞ்சம் யுக்திசாத்தியமான வேலையென்றாலும், கேவலம் மட்டிவேலையான நிலக்கரிவேலைக்கு எவ்வளவு கூலிகொடுக்கவேண்டுமோ அவ்வளவு கூலி தட்டாரவேலைக்குக் கொடுக்கக்கூடாது; ஏனெனில் தட்டாரவேலை அத்தனை அசங்கியமானதுமல்ல; அத்தனை அபாயமானதுமல்ல. நியாயம் இவ்விதமாயிருக்க, நடத்தை ஒருவிதமாயிருக்கின்றது. மிகவும் அருவருப்பும் சிரமமுமுள்ள வேலைகளுக்குத்தான் இந்தக் காலத்தில் அதிக தாழ்வான கூலி கிடைத்துவருகிறது. அதேனெனில் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்பவர்களுக்கு வேறொருவேலையும் செய்துபிழைக்கத் தெரியாது; அவர்களை லட்சியம்பண்ணுவோரில்லாததுபற்றி வேலை எப்படியாவது அகப்பட்டால்போதுமென்று எண்ணும்படியாகிறது.


எந்தக்காலத்திலும் கிடைக்கத்தக்க வேலைகள் சில உள; மற்றவைகள் அவ்வளவு நிச்சயமாய் நினைத்தபொழுது கிடைக்கமாட்டா. மூட்டை சுமக்கிறவனுக்கு வருஷம் முந்நூற்றறுபதுநாளும் வேலை அகப்படுமென்ற தைரியமுண்டு. கொல்லத்துக்காரனுக்கோ மழைநாளில் வேலைகிடையாது; மற்றக் காலங்களிலும் யாராவது வந்து கூப்பிட்டால் உண்டு; இல்லாவிட்டாலில்லை. ஆகையால் அவனுக்கு அநேகநாள் வரும்படியில்லாதிருக்கும். வேலைசெய்கிற நாளில் கிடைக்கிற சம்பாத்தியத்தைக்கொண்டு சும்மாயிருக்கிற நாளைக்கும் ஈடுசெய்துகொள்ளவேண்டியிருப்பதுபற்றி அவனுக்குக் கூலி அதிகம். இடையிடையே வேலைவிட்டுப்போகிறநிமித்தம் அதிககூலி கொடுக்கிறதேயல்லாமல் வேலையின் திறமைக்காகக் கொடுப்பதன்று.

வேலைகற்கத்தொடங்கி அதில் பயிலுவதனாலேயே தேர்ச்சி சித்தமாயுண்டாகும் என்ற நிச்சயம் எல்லாவேலைகளுக்குமில்லை; சில வேலைகளில் மட்டுத்தானுண்டு. இருபது சிறுவர்கள் செருப்புத்தைக்கிற வேலையைக் கற்கத்தொடங்கினால் அவர்கள் எல்லாரும் அந்த வேலையில் கெட்டிக்காரர்களாவார்களென்று நிச்சயமாய் நம்பலாம். இருபதுபேர் சட்டம் அப்பியசித்தால் அவர்களுள் ஒருவன் நியாயவாதத்தில் பூரணஞானமடைந்து வக்கீல் வேலையை ஜீவனோபாயமாகப் பிடிப்பானேயானால் அதிசயம். அந்த இருபதுபேருக்கு வரவேண்டிய சம்பாத்தியத்தையும் இந்த

அவை நிரம்பக் காற்றுவந்தடைகின்றது. அதனால் காற்றூடி சுத்தப்படுவதற்காகவே இருதயத்திலிருக்கிற ரத்தம் சுவாசப் பைக்குள் பிரவேசிக்கின்றது.

இருதயத்தை நாம் மடித்தால் ஒரு மனிதனுடைய கையைப் பார்க்கக் கொஞ்சம் பெரிதாயிருக்கும். அதற்குள் நான்கு அறைகள் அடங்கியிருக்கின்றன. அவை உலர்ந்துபோகாமல் எப்போதும் ஈரமாயிருப்பதற்காக, திரவபதார்த்தம் நிரம்பிய ஒருவகை இரட்டைப்பை அங்கேயிருக்கின்றது.

சென்ற 1875—ம் வருஷத்து மார்ச்சுமாசச் சஞ்சிகையைப் பார்த்தால் இருதயம் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலுமிருக்கின்ற சுவாசப்பைகளுக்கு நடுவிலிருப்பதையும், அந்த இருதயம் அடங்கியிருக்கும் பையின் ஓரத்தையும் நாம் நன்றாய்க் காணலாம். இருதயத்தின் உட்புறத்தைக் காண்பதற்காக இருதயகோசத்தை அறுத்து அதற்குள் உள்ளபடி இப்படத்தில் காட்டியிருக்கிறோம்.





திறந்த இருதயம்.

0 0 இவை கறுத்த ரத்தத்தை இருதயத்திற் கொண்டுசேர்க்கிற ரத்த நரம்புகள்.
1. வலது சிரவம் அல்லது கண்.
2. வலது சடரம்.
3. இடது சிரவம் அல்லது கண்.
4. இடது சடரம்.
5 5. கறுத்த ரத்தத்தைச் சுவாசாசயத்திற்குக் கொண்டுபோகிற பிராஹன்னாடி அல்லது பெரியகுழாய்.
6 6. சிவந்த ரத்தத்தைத் திருப்பி இருதயத்திற்குக் கொண்டுபோகிற ரத்தநாடி.
7 7. சிவந்தரத்தத்தைத் தேஹம்முழுதும் கொண்டுசெலுத்துகிற பெரியநாடி அல்லது நரம்பு.

நாம் உட்கொள்ளும் உணவுகளினாலாகிற அன்னப்பாகு ரத்தத்தோடு கலந்தவுடன் அந்த ரத்தம் பெரியநாடிகளின் மூலமாய் இருதயத்திற்போய்ச் சேருகின்றது என்பது நமக்கு முன்னமே

தெரியுமே. அந்த நாடிகளின் நுனி (0 0) இரண்டை மேலே காட்டிய இருதயத்தின் படத்தில் நன்றாய்ப்பார்க்கலாம். அவை இரண்டும் தம்மிடத்திற்கு வந்த ரக்தத்தை இருதயத்தின் வலது சிரவத்தில் (1) கொட்டிவிடுகின்றது.

இந்த நாடிகள் இருதயத்தில் கொண்டுசேர்க்கிற ரக்தம் மங்கலான கறுப்புநிறமாயிருக்கும். மேலும் அது தேஹத்தில் பரவி வரும்போது அதனுடன் பல அசுத்த வஸ்துக்களும் கலந்து இருக்கும். அப்புறம் சுவாசப்பையிற்சென்று காற்றினால் சுத்தமாகிச் சிவப்புநிறமாகின்றது.




ரக்தம் பரவுதல்.

இருதயத்திலிருந்து ரக்தம் சுவாஸாசயத்திற் பிரவேசிக்கிறவிதமும், அதிலிருந்து தேகம்முழுதும் பரவுகிறவிதமும், மேலே காட்டிய இருதயத்தின் படத்தையும், ரக்தம் பரவுகிற படத்தையும் பார்த்தால் நன்றாய்த் தெரியும். அப்படங்கள் இருதயத்தையும், ரக்தநாடிகளையும், சுவாசக்குழாய்களையும் உள்ளபடி காட்டாவிடினும், அப்படங்களைப் பார்த்தால் அவைகளின் வழி இப்படிப் பட்டதென்று ஒருவாறு தெரியவரும்.

கறுத்தநிறமுள்ள ரக்தமானது நாடிகளின்மூலமாய் இருதயத்தின் சிரவத்திற் (1) சேர்ந்தவுடன் அதிலிருந்து அதின்கீழிருக்கிற மடிப்பு மூடியுள்ள சிறுதுவாரத்தின்வழியாய் வலது ஜடரத்தில் (2) பிரவேசிக்கின்றது.

அந்தத் துவாரத்தில் இரண்டு சிறிய தோல்துண்டு இரண்டு கீர்கதவுகள்போலிருக்கின்றன. அவைகளில் ஒருபக்கத்தது ஒருபோ

துந் திறக்கக்கூடாதபடி மிகவும் அழுத்தமாயும், மற்றொரு பக்கத்தது மூடவும் திறக்கவும் அனுகூலமாய்த் தளர்ந்தும் இருக்கின்றன. அது ஏதாவது ஒன்று உள்ளே வரமாத்திரம் வழிவிடும். உள்ளே வந்தவுடன் மூடிக்கொள்ளும். அதனால் ரக்தம் அதற்குள் புகுந்தவுடன் அந்தவழி நன்றாய் அடைந்துபோகின்றது. பிறகு அந்த ஜடரமானது நன்றாய் அரக்கி அந்த ரக்தத்தை அதனின்றும் வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் இரண்டாய்ப் பிரிந்தோடுகிற பிருஹன்னாடி (5) களின்வழியாய் சுவாஸாசயங்களுக்குப் போம்படிசெய்கின்றது.

இவ்வாறு இருதயத்திலிருந்து சுவாஸாசயத்திற் சேர்ந்தவுடன் ரக்தமானது அவ்விடத்தில் நன்றாய்க் காற்றாடி, முன்னிருந்த மங்கல்நிறம்மாறி பளபளப்பான சிவப்புநிறமாகின்றது. அங்கே வாயுமண்டலத்திலிருக்கின்ற சுவாஸவாயுவானது அந்த ரக்தத்திலிருக்கும் கறுத்த விஷவஸ்துவோடுகலந்து, அதை ஒருவகை விஷக்காற்றாகமாற்றி, நாம் விடுகிற சுவாஸரூபமாய் வெளியேகொண்டு தள்ளுகின்றது.

இவ்விதமாய் அங்கே சுத்தப்பட்டுச் சிவப்பாக மாறினவுடன் ரக்தமானது, கீழ்க்குறித்த படங்களில் வெளுப்பாய்க் காணப்படுகிற (6 6)•நரம்புகளின்வழியாய் இருதயத்திற்குள் வந்து சேரும். இருதயத்தில் முன் கறுப்புரக்தம் தங்கியிருந்த அறைக்குள் அன்று. இடதுசிரவம் என்கிற மூன்றாவது அறைக்குள் பிரவேசிக்கும். அதினின்றும் அதின் கீழிருக்கின்ற இடது ஜடரத்திற்சென்று அங்கிருந்து 7—வது குறிப்புள்ள பெரியநாளத்தின் வழியாய் தேஹமெங்கும் பாவி நம்மைப் போஷிக்கும்.

நமது இருதயம் ஓயாமல் அடித்துக்கொண்டேயிருக்கிறது. ஒரு நிமிஷத்திற்கு எழுபதுதாத்திற்குக் குறைகிறதில்லை. இருதயம் எப்போதும் அடித்துக்கொண்டிருப்பது நமது தேஹத்திலுண்டாகிற ரத்தம் சுத்தப்பட்டுத் தேகமெங்கும் பரவும்படி பக்குவப்படுவதற்காகவே. ஒரு நிமிஷத்திற்கு சுமார் பதினைந்துதடவை வீதம் நாம் ஒரே அளவாய் சுவாசம்விட்டுக்கொண்டு வருவோமானால், சுவாஸாசயம் நன்றாய் மலர்ந்து நல்லகாற்றை உறிஞ்சுகொள்ளும். வாயுமண்டலத்திலிருக்கும் சுவாஸவாயு உட்புகுந்து ரக்தத்தைச் சுத்தப்படுத்தி அதற்குச் சிவப்புநிறமுண்டாக்கும். கெட்டகாற்றும் ஒருதடையுமில்லாமல் சுவாஸத்தின் வழியாய் வெளியே வந்துவிடும். அப்படி சுத்தப்பட்ட ரக்தமும் இருதயத்திற்போய்ச் சேர்ந்து அதன்மூலமாய்த் தேகமுழுதும் வியாபிக்கும்.

ஒரு நிமிஷகாலம் இருதயம் ஓய்சலடைந்து, ரக்தத்தை சுவாஸாசயத்திற்கொண்டு சேராமலும், சுவாஸாசயம் மலர்ந்து காற்றை

யுறியாமலுமிருந்தால் உடனே நாம் இறப்பது நிச்சயமே. தண்ணீரில் மூழ்கிப்போனவர்கள் இறப்பதுமிப்படியே.

இவ்விதமாக நமது தேஹத்திலுள்ள யந்திரங்கள் ஓயாமல் அசைந்துகொண்டிருப்பதனால் நமது உயிர் நிலைநிற்கின்றது. ஒருக்ஷண காலம் அசையாமல்நின்றால் அது தேஹத்தில் தங்கமாட்டாது. இதை நினைத்துப்பார்த்தால் நமது தேஹஸம்ரக்ஷணமெல்லாம் சர்வவல்லமையுள்ள கடவுள்கையில் அடங்கியிருக்கின்றதேயொழிய நமக்குக் கொஞ்சமாவது சுவாதீனமுண்டென்று தோன்றுமா?

இப்படி நாம் சிறிதும் சுவாதீனமில்லாமல் அஜாக்கிரதையாயிருக்க, இக்காரியங்களெல்லாம் ஒரு குறையுமில்லாமல் சரியாய் நடந்தேறிவருகின்றனவே! இவைகளை நடத்த சர்வவல்லவன் ஒருவனில்லாவிட்டால் இப்படி நடந்துவருமா?

ஆகாரத்திற்காக நாம் கொஞ்சநேரம் காத்திருக்கமாட்டுவோம்; அதனால் அதை நாம் தேடும்படி வைத்திருக்கிறது. காற்றோ அப்படியல்ல, அதற்காக நாம் ஒரு நிமிஷங்கூடக் காத்திருக்கமாளாது. அதனால் சுத்தமானகாற்றை எங்கும் நிரப்பிவைத்து அதை உட்கொள்ளும்படி சுவாஸாசயத்தை மலர்போல் மலர்த்திவைத்திருக்கின்றது.

## பொறாமைப் பேய்பிடித்த மூவர்கதை.

தாங்கள் இருப்பிடத்திலிருக்கமாட்டாமல் யாத்திரைசெய்யவேண்டுமென்று தங்கள் தங்கள் தேசத்தைவிட்டுப்போன மூவர் ஒருநாள் தற்செயலாய் ஓரிடத்தில் சந்தித்து ஒருவருக்கொருவர் லோகாபிராமமாய்ச் சமபாஷணைசெய்துகொண்டுபோகையில், அவர்களில் ஒருவன் மற்றவர்களைப்பார்த்து, என் மித்திரர்களே! நீங்கள் சுதேசத்தைவிட்டு முகமறியாததேசத்தில் வந்து அல்லாடுவதற்கு யாதுகாரணமோ? எனக்கு விளங்கச்சொல்வீர்களென்று வினவினான்.

அதற்கு அவ்விருவருள் ஒருவர் கொடுத்த விடையாவது: ஐய்யா! எனக்கு ஒரு குணமுண்டு. நான் உலகத்திலுள்ளவர்களைப் பார்த்துப் பொறுக்கமாட்டேன். எதைப்பார்த்தாலும் பொறாமையுண்டாகிறது. அயலார் எனக்குத் தீங்குசெய்வதனால் அவர்களிடத்தில் எனக்குப் பொறாமையுண்டாகின்றதென்று எண்ணவேண்டாம். 'அயல்வாழ்ந்தால் ஐந்துபட்டினி' என்கிறார்களே அதற்குத் திருஷ்டாந்தம் நானேயொழிய வேறில்லை. எவனாவது கொஞ்சம்

செம்மையாயிருக்கக்கண்டால் உடனே என் மனதில் எரிச்சலுண்டாகும். அந்தக்குணம் என் சுபாவத்திலேயே தோன்றினது. அதை வெளியே சொல்லிக்கொள்ள எனக்கே வெட்கமாயிருக்கிறது. அதற்காகவே ஒருவரையும் பாராமல் வந்துவிட்டேனென்றான்.

மற்றொருவன், நேசனே! இனி நான் சொல்லவேண்டுவது அதிகமாயில்லை. இரண்டொருவார்த்தைதான்; அதேவியாதிதான் என்னையும் இப்படி அல்லாடும்படி விட்டது. அந்தப் பொறாமை நோய் அறுபதுநாழிகையும் என் மனதை வதைத்துக்கொண்டிருந்ததனால் ஒருவர்முகத்திலும் விழியாமல் வந்துவிட்டேன் என்றான்.

இவ்விருவர் சொன்னதையும் கேட்டு அவன், அப்படியா! என் உயிர்த்தோழர்களே வாருங்கள்! ஒருவரையொருவர் நன்றாய் ஆலிங்கனஞ் செய்துகொள்வோம். நம்மூவரையும் ஒரே நோய் வந்து வதைக்கின்றது பார்த்தீர்களா! என்றுசொல்லி, சந்தோஷத்தால் அவர்களை ஆலிங்கனஞ்செய்துகொண்டான். அதுநிமித்தம் மூவரும் நேசர்களாகி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் கூடியாத்திரைசெய்துகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் ஒரு கணவாய் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் எதிரில் பணப்பையொன்று நேர்பட்டது. அது யாராவது வழிப்போக்கர் தெரியாமல் போட்டுவிட்டுப் போனதாயிருக்கலாம். இவர் மூவரும் அதைக் கிட்ட வந்துபார்த்து, இதை மூவரும் பங்கிட்டு எடுத்துக்கொண்டு வீட்டிற்குப்போய்ச் சுகமாய் வாழலாமென்றார்கள். அது அவர்கள் வீம்புக்குப் பேசின பேச்சேயன்றி வேறல்ல. மற்ற இருவர்களும் அதனால் சுகிக்கட்டும் என்கிற கருத்து அம்மூவருள் ஒருவர்க்கும் இல்லை. ஆதலால் ஒருவரும் அதைத்தொடாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார்கள். அது தனக்கு இல்லாமல்போனாலும் போகட்டும், அதை வேறொருவர் அனுபவியாமலிருந்தால் அதுவே பெரிய சவுக்கியமென்று மூவரும் கருதியிருந்தனர். ஆயினும் அதை விட்டுவிட்டுப் போவதற்கு மாத்திரம் ஒருவர்க்கும் மனமில்லை. அதை மற்ற இருவர்க்கும் பங்கிட்டுக்கொடுப்பது, மூவருக்கும் வெகு வருத்தமாயிருந்ததனால், என்னசெய்யலாமென்று யோசித்துக்கொண்டு இரவும் பகலுமாய் மூவரும் அங்கேயே நின்றார்கள்.

இப்படியிருக்கையில் அத்தேசத்தரசன் தன் ஆடம்பரங்களோடு வேட்டையாடிக்கொண்டு தற்செயலாய்ப் பொறாமைப் பேய்பிடித்து நிற்பவர்களண்டைவந்து அவர்களைச் சுற்றிப்பார்த்து, இதென்னசெய்தி; பணப்பையைக் கீழேபோட்டு அதைச் சுற்றி மூன்றுபேராய் நிற்கிறீர்களேயென்று கேட்டான். அதைக் கண்டு அவர்கள் திகிலடைந்தார்கள். அதன் உண்மையைச் சொல்

லாவிடின் பலமான சிக்ஷைநடக்குமென்று அரசன் பயமுறுத்தவே, அவர்கள் நடந்தசெய்தியைச்சொல்ல ஆரம்பித்தார்கள்.

மகாராஜனே! எங்கள் மூன்றுபேரையும் ஒரு பேய்பிடித்திருக்கிறது. அதற்குப் பொறாமை என்று பெயர். அதுதான் எங்களை ஊரைவிட்டுத் துரத்திவிட்டது. ஆயினும் நாங்கள் மூன்றுபேர் மாத்திரம் ஒன்றாயிருந்தால் அதற்குச் சம்மதிதான். இந்தக் கொடியநோயை யாராவது நீக்குவார்களாயின் அவர்களுக்கு இவ்வுலகத்தில் நல்ல கீர்த்தியுண்டாகும். ஏனெனில் எல்லாத் துன்பங்களையும் விளைப்பதற்கு இந்த நோய்தான் காரணமென்று எங்களுக்கே நன்றாய்த் தெரிகின்றது. அதற்கு நாங்கள் என்ன செய்வோம்; எங்களால் நீக்கக்கூடவில்லை. அதனால் வழியிற்கிடந்த இப்பணப்பையை ஒருவரும் எடுத்துக்கொண்டுபோக மனமில்லாமல் மூவரும் தவித்துநிற்கிறோம் என்றார்கள்.

அதுகேட்டு அரசன், நல்லது பெரியோர்களே! உங்கள் நோயை நிவர்த்திசெய்ய நான் வைத்தியனாயிருக்கிறேன். அந்த நோய் யார்யாருக்கு எவ்வளவு தேஹத்தில் ஊறிப்போயிருக்கிறதோ அதை ஒளியாமல் தெரிவிப்பீர்களானால் அததற்குத்தக்க வீரியமுள்ள மருந்தைக்கொடுத்து நான் நிவர்த்திசெய்யமாட்டுவேன். அதை நன்றாய்ச் சொல்லக்கடவீர்கள் என்று வேண்டினான்.

அதற்கு முதலில் ஒருவன் சொல்லுகிறான். ‘அய்யோ! என் பொறாமை நோயை நான் என்னவென்று சொல்லுவேன்! அது தலைக்கேறிப்போயிருக்கிறது. உலகத்தில் ஒருவர்க்கு நன்மைசெய்து நான் கண்ணால் பார்த்துப் பொறுக்கமாட்டேன்’ என்றான். அதுகேட்டு மற்றொருவன், ‘அப்படியா! ஆனால் நீ என்னைவிட ரொம்பவும் யோக்கியமானவன், அயலானுக்கு நாம் ஒத்தாசைசெய்வதைப் பொறாமலிருப்பது பெரிதல்ல; எவனாவது ஒருவன் மற்றொருவனுக்கு உதவிசெய்தால் அதைக்கூட நான் பார்த்துச் சகிக்கமாட்டேனே’ என்று சொல்ல, இவ்விரண்டையுங்கேட்ட மற்றொருவன், ‘ஆனால் இந்த விஷயத்தில் நீங்களிருவரும் வாலிபர்கள்தான். இந்த நோய் உங்களுக்கு இப்போதுதான் ஆரம்பம்போல் காண்கிறது. ஒருவர்க்கு நாம் உதவிசெய்வதையும், வேறொருவன் மற்றொருவனுக்கு உதவிசெய்வதையும் சகிக்கமாட்டாமலிருப்பது அவ்வளவு சிறந்ததல்ல; எனக்கு எவனாவது ஒத்தாசைசெய்தாலும் அதைக்கூட நான் பார்க்கமாட்டேனே’ என்று வெகு பரிதாபமாய்ப் புலம்பினான்.

இப்படி அவர்கள் பேசுவதைக்கேட்டு அரசன் ஆச்சரியப்பட்டு ஒன்றும் உத்தரஞ்சொல்லத் தோன்றாமல் நின்றான். கொஞ்சநேரம் தன்னால் கூடியவரையில் நன்றாய் யோசனைசெய்து நீங்கள் மனிதர்களா? அல்ல, பிசாசங்கள்போலத் தோன்றுகிறீர்கள். நான் எத்தனைநாழிகை ஆராய்ந்தாலும் உங்கள் நோய்க்குத் தகுந்த

ஔஷதம் இன்னதென்று என் புத்தியில் தோன்றவில்லையே என்று சொல்லித் தன் வேலையாட்களைவிட்டு அவர்கள் வைத்திருந்த பையைப் பிடுங்கச்சொல்லி, அம்மூவருக்கும் தக்கபடி தண்டனைவிதித்தான். அயலானுக்கு உதவிசெய்து சகிக்கமாட்டாதவனை, உடுக்கத்துணியும் உண்ணச்சோறுமின்றி ஆரணியத்திலோட்டிவிட்டான். ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதைக்கூடக் காணமாட்டாதவன், உலகத்திற்கெல்லாம் தீங்குவிளைப்பவனாதலால், உலகத்தில் வசிக்க யோக்கியனல்லனென்று அவனைச் சிரச்சேதஞ்செய்யக் கட்டளையிட்டான். தனக்கு நன்மைசெய்வதை வெறுக்குந்தன்மையுள்ள புருஷனால் உலகத்திற்கு யாதொரு தீங்குமில்லை, அவன் தனக்குத் தானே கெடுதி விளைத்துக்கொள்ளுகிறானென்று நினைத்து அவனை நடுப்பட்டணத்தில், உதாரகுணமும் தயையும் உள்ள ஜனங்கள் அநேகமாய் நடமாடும்படியானவிடத்தில் இருக்கச்செய்தான். அங்கே அவன், அவ்விடத்திலுள்ளவர்கள் தங்களுக்கு இயன்றமட்டும் தானதருமம்முதலிய உபகாரச்செயல்கள் செய்வதையும், தனக்கு தினந்தோறும் பலவிதமான உபசாரணைகள்செய்வதையும் பார்த்துப் பார்த்து மனம்புண்பட்டுக் கொஞ்சநாளில் தானே இறந்துபோனான்.

## தசகுமார சரிதம்.

### இரண்டாவது:

### அபஹாரவர்மாவின் கதை (தொடர்ச்சி).

*அரசகுமாரனைத் தேடப்போன அபஹாரவர்மா உஜ்ஜயினீ நகரத்தில் பதிவிருதையான ராகமஞ்சரி என்னும் வேசிப்பெண்ணை மணம்புரிந்து அவளுடன் குதூஹலமாயிருக்கையில், ஒருநாள் மத்தியபானம்பண்ணி மயக்கத்தால் உடல் தெரியாமல், நகரமுழுதுமோரிரவில் கொள்ளையாடிவரவேண்டுமென்று ஓடிக் காவலாளர் கையிலகப்பட்டுக்கொண்டான். மயக்கந்தெளிந்தபின், என்ன காரியஞ்செய்தோமென்று பச்சாதாபமுண்டாகி, தன்னைக் காக்கும்படி தன்னுடன் ஓடிவந்த சிருங்காலிகை என்பவளோடு ஏதோ ஒரு செய்திசொல்வது போலப் பின்நடத்தவேண்டியகாரியங்களைத் திட்டஞ்செய்து தான் சிறைச்சாலைபோய்ச் சேர்ந்தான் எனச் சென்றமாதத்துச் சஞ்சிகை சொல்லுகின்றது.*

அபஹாரவர்மா பின்னும் தன் செய்தியைச் சொல்லுகிறான்: ஓ ராஜகுமாரனே! நான் சொன்ன யோசனையைக் கேட்டுப்போன சிருங்காலிகை வெகு அழகாய் அலங்கரித்துக்கொண்டு ஒருநாள் மாலைவேளையில், தன்னுடன் வந்தவர்களனைவரையும் தூரத்தில் நிறுத்திவிட்டு என்னண்டைவந்து, ஓ மகாபுருஷனே! ஒரு தீங்குமில்லாமலிருக்கிறீரா? நீர் செய்தயோசனை அப்படியே ஈடேறிற்று. உமது

கட்டளைப்படி நான் தனமித்திரனண்டைபோய், இப்போது உமது உயிர்த்தோழரான அபஹாரவர்மா கேட்டுக்கொள்வதாவது: "நான் இப்போது புத்தியீனத்தால் ஒரு தீச்செயல்செய்து அதனால் காவலில் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறேன். அதற்காக நீ உடனே ராஜசமுகத்திற் சென்று விண்ணப்பஞ்செய்யவேண்டுவது ஒன்று. 'ஓ தேவனே! முன் அர்த்தபதி என்பவன் களவுசெய்துகொண்டு போன என் பணப்பையைத் தாங்களே தயவுசெய்து வாங்கி எனக்கு அளித்தீர்கள். பிறகு ராகமஞ்சரியின் கணவனொருவன் எனக்கு நேசன்போல் நடத்திவந்தான். அதனால் நான் அவன் வீட்டுக்குப் போக்குவரவாயிருந்தேன். அவன் தான் ஈனபுத்தியுடையவனாதலால் என்னிடத்தில் ஏதோ சந்தேகப்பட்டு, கோபித்து என்னுடைய பையையும் தன் மனையாள் நகைப்பெட்டியையும் அபஹரித்துக்கொண்டு, பட்டணத்தையும் கொள்ளையடிக்கவேண்டுமென்று ஓடி நகரசோதகர் கையிற்பிடிபட்டான். அப்போது ராகமஞ்சரியின் வெள்ளாட்டி ஒருத்தி அவனை நல்வார்த்தை சொல்லி அவன் ஆபரணம் வைத்திருக்குமிடத்தை அறிந்துகொண்டுவந்தாள். என்னுடைய பையும்வந்து சேரும்படி அருள்செய்யவேண்டும்' என்று கேள். அவன் எனக்கு ஒன்றும் தண்டனைவிதியாமல் உன் பொருளை வாங்கிக்கொடுத்தால் அதுவே எனக்கு மேலான நன்மை என்று சொன்னார்" என்றதுகேட்டு அவர் அப்படியே நடத்தினார்.

அதப்படியிருக்க, நான் ராகமஞ்சரியினிடத்தினின்றும் வேண்டியபொருள் கொண்டுகொடுத்து, ராஜகுமாரியான அம்பாலிகையின் தோழியாகிய மாங்கலிகை என்பவளைக் கைவசப்படுத்தி அவளைக் கொண்டு ராகமஞ்சரியையும் அம்பாலிகையையும் தோழிகளாக்கி நாள்தோறும் விநோதமான கதைகளைச் சொல்லிவந்தேன். அதனால் அம்பாலிகைக்கு என்னிடத்தில் விசேஷப்பிரீதியுண்டாயிற்று. ஒரு நாள் அனைவரும் உப்பரிகைமேல் விளையாடும்போது நான் அம்பாலிகையைநோக்கி, 'இதோ நீ காதிலணிந்திருந்த கருநெய்தல் நழுவிப்போயிற்று' என்று பரிஹாசஞ்செய்துகொண்டிருக்கையில், காந்தகன் என்கிற ராஜாங்க உத்தியோகஸ்தன் ஏதோ ஒருகாரணமாய் அந்தப்பெண்மாளிகைக்கு அருகில் வரக்கண்டு, பக்கத்திலிருக்கும் புறுக்களைத் துரத்துவதுபோல் நடித்து அவனைப்பார்த்துப் புன்னகைநகைத்தேன். அம்பாலிகை நான் செய்தவிநோதத்தைப்பார்த்து

மனோஹரமாய் சிரித்ததுகண்டு அவன் தனக்கு அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று கருத்துண்டாயிருக்கிறதென்று சாடைகாட்ட, நானும் அதற்குத் தக்கபடி கண்ணினால் சமாதானஞ்சொன்னதறிந்துகொண்டு வெளியேபோயினான். நான் அன்றையதினம் ராத்திரி அம்பாலிகையின் முத்திரையோடு சந்தன தாம்பூலமுதலியவைகளைக் கொண்டுபோக, அதுகண்டு காந்தகன், கடலில் மூழ்கிப்போன கப்பல் கரைகண்டதுபோல் என்னைப் பார்த்துப் பேரானந்தமடைந்தான். நானும் இவையெல்லாம்உன்னைக் கணவனாகக் கருதிய ராஜகுமாரத்தி கொடுத்தனுப்பினாள் என்று சொல்லி அதை அவன் கையில்கொடுத்துத் தந்திரமாய் அவனுக்கோராசைகாட்டினேன்.

ஓ ராஜனே! உன்னிடத்தில் நல்ல குறிகள் இருக்கின்றன. அப்படியே இந்த ராஜ்ஜியம் உன் ஆளுகையில் வரப்போகிறதென்று ஒரு ஸாமுத்திரிகசாஸ்திரி உன் குறிகளைக்கண்டு எனக்குச் சொல்லியிருக்கிறார். இப்போது அரசன் மகள் உன்னை விரும்புவதைப்பார்த்தால் அப்படியே நடக்குமென்று தோன்றுகிறது. இவ்வரசனுக்கு அவளொரு குமாரத்தியேயொழிய வேறுசந்தானமில்லை. ஆதலால் உனக்கும் அம்பாலிகைக்கும் ஸம்பந்தமுண்டென்று அரசன் கேள்வியுற்றுக் கோபித்தாலும் தன் அருமையான மகளுக்கு அபாயமுண்டாகுமென்று உனக்கு யாதொரு தீங்குமியற்றமாட்டான். உன்னை இளவரசனாயே யேற்படுத்துவான். ஆதலால் உனக்கு இச்செய்கை நயமுண்டாக்குமேயன்றி நஷ்டமுண்டாக்காது. அதற்கு நீரேன் முயலக்கூடாது; பெண்கள் மாளிகைக்கு வர வழிதெரியாமல் தவிக்கிறீரோ? எவனாவது வல்லவன் ஒருவனைக் கொண்டு சிறைச்சாலைக்கும் அதின்மதிலை யடுத்திருக்கும் உத்தியானவனத்திற்கும் வழியேற்படுத்திக்கொண்டு அத்தோட்டத்துள் வருவையாகில் அதன்பின் உன்னைக் காப்பது எங்களுடைய கடமை. அம்பாலிகையின் தோழிமார்களெல்லாம் அவளிடத்தில் அதிக அன்புடையவர்களாதலால் அவர்கள் இந்த ரகசியத்தை வெளியிடார்கள் என்று நான் சொன்னது கேட்டு, அவன் சந்தோஷமடைந்து, அம்மா! நீ நல்ல யோசனை சொன்னாய்! என்னிடத்தில் வல்லவனான திருடனொருவனிருக்கிறான். அவனால் ஒருநொடியில் இக்காரியத்தைக் கைகூட்டுவான். அவனை வசப்படுத்துகிற விதமெப்படியென்று சற்று ஆலோசித்தான். அதறிந்து

நான் அந்த மனிதன் யார்? அவன் எத்தன்மையவன் என்ற
தற்கு அவன், முன் தனமித்திரனுடைய பணப்பையைப் பறித்
துக்கொண்டவனென்று உன்னையே அதற்கு ஆளாக்கிச்சொன்னான்.
அதற்கு நான் சொன்ன உபாயமாவது, இதற்காக நீயேன் சிந்திக்
கிறாய்; அந்தக் கள்ளனைக்கண்டு, மகாபுருஷனே! இப்போது நீ
எனக்கு இக்காரியத்தை முடிப்பாயாகில், உன்னை நான் விடுவிப்பே
னென்று அவனுக்கு போதனைசெய்து,காரியம் நிறைவேறினவுடனே
சிறையில் கொண்டடைத்து, 'இந்தத் திருடன் ஒருபோதும் வழிக்கு
வருகிறதில்லை, வெகு தைரியசாலியாயிருக்கிறான். எவ்வளவு நல்
வார்த்தைசொல்லியும் அவன் கொள்ளையாடின பொருளைக் கொடு
த்தானில்லை. ஆதலால் அவனைத் தண்டிக்கவேண்டுவதுதான்' என்று
ராஜசமுகத்தில் விண்ணப்பஞ்செய்து சிரச்சேதம் செய்துவிட்டால்
நமது காரியமும் எளிதிலே கைகூடும். ரகசியமும் வெளியே
வராது என்றதுகேட்டு அவன் களிப்படைந்து, அப்படியே ஆகட்
டுமென்று வந்து தான் வெளியே நின்றுகொண்டு உன்னை நயப்படு
த்தும்படி என்னை அனுப்பினான். இதற்குமேல் நடத்தவேண்டுவ
தென்னவோ, நீரே நன்றாய் ஆலோசிக்கலாமென்றாள்.

## சமாசாரம்.

**பிரின்ஸ் அவ் வேல்ஸ் மகாப்பிரபு அவர்களுடைய தேசயாத்திரை.**—
நமது இளவரசர் நவநாட்டில் நாளது மீ 1௳ க்வாலியர் நகரத்திற்கு விஜ
யஞ்செய்து, மறுநாள் ஸிந்தியா ராஜாவினுடைய சேனைகளை அணிவகுத்
துச் சோதித்து, அந்நகரக்கோட்டையைச் சுற்றிப்பார்த்து; புதிய அரசமாளி
கையில் நடந்த விருந்திற்கும், மாலையில் கூடின கனவான்கள் சபைக்கும்
மஹாராஜாவின் வேண்டுகோளின்படி விஜயஞ்செய்தார். 3௳ அந்நகரைவி
ட்டுப் புறப்பட்டு 4௳ ஜயபூர் போய்ச் சேர்ந்தார். 5௳ ஜயபூர் மஹாராஜா
வோடு புலிவேட்டையாடி, மஹாராஜாவின் அரண்மனையில் தர்பாருக்கு
விஜயஞ்செய்தார். 15௳ அங்கிருந்து பிரயாணப்பட்டு 20௳ நேபாளத்திற்
பிரவேசித்தார். 21௳ அத்தேசாதிபராகிய ஸர்ஜங்பஹதூர் என்பவருடன்
புலிவேட்டையாடுவதற்காக இமயமலையடிவாரத்திற்குச் சென்றனர்.

Printed at the C. K. S. Press.



SACRED POOL NEAR TRICHINOPOLY.

திரிசிரபுரத்திற்கு அருகேயுள்ள விசித்திர தேவாலயம்.